# மாலைக்கதிர்
Maalaikkathir





சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 25 வியாழக்கிழமை 08.05.2025 கதிர் 190

# விலை போகாதவரே யாழ். மேயராக வரவேண்டும்!

## முன்னாள் மேயர் மணிவண்ணன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 08

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயராக வரக் கூடியவர் விலை போகாதவராகத் தமிழ்த் தேசியப் பற்றுடன் செயற்படக் கூடியவராக இருக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் தமிழ் மக்கள் கூட்டணியின் முக்கியஸ்தரும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் மேயருமான சட்டத்தரணி வி.மணிவண்ணன் வலியுறுத்தினார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

7➤




# தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்துக்கொண்டு ஆட்சி அமைப்போம்

## 'சங்கு' கூட்டணியின் எம்.பி. அடைக்கலநாதன் தெரிவிப்பு



மன்னார், மே 08

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வைத்துப் பார்க்கின்றபோது வடக்கு, கிழக்கில் எந்தக் கட்சியும் தனித்து ஆட்சி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே நாங்கள் கூறியது போல் தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்துக் கொண்டு நாங்கள் ஆட்சி அமைப்போம்." - என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று வியாழக்கிழமை மதியம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "

நடைபெற்று முடிந்துள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் வடக்கு, கிழக்கில் எமக்கு ஆணை தந்துள்ளனர். எதிர்வரும் காலங்களில் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படவில்லை என்றால் மக்கள் வழங்கிய ஆணையை மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற செய்தியைச் சொல்லியுள்ளனர்.

7➤

# மின்னல் தாக்கி ஒருவர் மரணம்

## யாழ்ப்பாணத்தில் சோகம்



யாழ்ப்பாணம், மே 08

யாழ்ப்பாணத்தில் இன்று மின்னல் தாக்கி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஏழாலை பகுதியைச்

7➤

# புதிய பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக சுபாஷினி நியமனம்


கொழும்பு, மே 08

பரீட்சை திணைக்களத்தின் புதிய பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக சுபாஷினி இந்திகா குமாரி லியனகே இன்று நியமிக்கப்பட்டுள்ளார்.

7➤




# ஏழாலையில் வாள் வெட்டி தொழிலாளி ஒருவர் சாவு!



யாழ்ப்பாணம், மே 08

யாழ்ப்பாணம், ஏழாலை பகுதியில் தச்சுவேலை செய்துகொண்டிருந்த தொழிலாளி ஒருவர் பட்டறையில் வாள் வெட்டிய நிலையில் உயிரிழந்துள்ளார்.

7➤

# அம்ஷிகா விவகாரம்: நீதி கோரி போராட்டம்



கொழும்பு, மே 08

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் மாணவி ஒருவர் உயிரை மாய்த்துக்கொள்வதற்குக் காரணமாக இருந்த அனைவருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும், மாணவின் குடும்பத்துக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி இன்று வியாழக்கிழமை காலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பொதுமக்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அவர்கள் கொட்டாஞ்சேனை

7➤

# உழவு இயந்திரத்தின் சக்கரத்தினுள் சிக்கி இளம் குடும்பஸ்தர் பரிதாப உயிரிழப்பு!



யாழ்ப்பாணம், மே 08

யாழ்ப்பாணம் - அராலி பகுதியில் உழவு இயந்திரத்தின் சக்கரத்தினுள் சிக்குண்டு இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

அராலி மேற்கு, வட்டுக் கோட்டைப் பகுதியைச்

7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# இரண்டாவது மின் கட்டண திருத்தம் விரைவில்!



கொழும்பு, மே .08

2025ஆம் ஆண்டிற்கான இரண்டாவது மின் கட்டண திருத்தம் தொடர்பான பிரேரணையை இலங்கை மின்சார சபை எதிர்வரும் வாரத்திற்குள் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்திற்கான முதலாவது மின் கட்டண திருத்தம் ஜனவரி 17 ஆம் திகதி இடம்பெற்றதோடு, அப்போது மின் கட்டணங்களை 20 சதவீதம் குறைக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

இரண்டாவது மின் கட்டண திருத்தம் எதிர்வரும் ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது.

அதன்படி மின் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமெனின், அது தொடர்பான பிரேரணையை மே மாதத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டுமென அதன் தொடர்பாடல் பணிப்பாளர் ஜெயநாத் ஹேரத் தெரிவித்தார்.

மின்சார கட்டண திருத்தம் தொடர்பான பிரேரணையைப் பெற்றதன் பிற்பாடு 3 முதல் 6 வாரங்களுக்குள் இது தொடர்பில் ஆராய்ந்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதன் தீர்மானத்தை அறிவிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் தொடர்புடைய திட்டங்கள் குறித்து பொதுமக்களிடமும் யோசனைகள் கேட்கப்படும்.

மின் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளுமாறு சர்வதேச நாணய நிதியம் கோரியுள்ளது. அதன்படி, எதிர்வரும் காலப்பகுதியில் மின் கட்டணங்கள் திருத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இருப்பினும், இலங்கை மின்சார சபை இதுவரை பொதுப் பயன்பாட்டுகள் ஆணைக்குழுவிடம் பொருத்தமான பிரேரணையை சமர்ப்பிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

# ஆலயத் திருவிழாவில் யானை மிரண்டதால் நான்கு வயது குழந்தை உட்பட மூவர்

## யாழ். தாவடியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 08

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயம் ஒன்றுக்குத் தென்னிலங்கையில் இருந்து அழைத்து வரப்பட்ட யானை மிரண்டதில் 4 வயது குழந்தை ஒன்றும், இரண்டு பெண்களும் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாவடி பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் நேற்று புதன்கிழமை இரவு திருமஞ்ச திருவிழா இடம்பெற்றது. திருவிழாவுக்காக தென்னிலங்கையில் இருந்து இரண்டு யானைகள் அழைத்து வரப்பட்டிருந்தன.

மஞ்ச திருவிழாவின்போது மஞ்சத்திற்கு முன்பாக இரண்டு யானைகளும் அழைத்து வரப்பட்டன. அவ்வேளை வெடிகள் கொளுத்தப்பட்டு, தீப்பந்த விளையாட்டுக்கள் இடம்பெற்றன.

அதன்போது யானைகளில் ஒன்று மிரண்டதில் அருகில் நின்ற இரண்டு பெண்களும், நான்கு வயது குழந்தை ஒன்றும் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகளைச் சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆலயத் திருவிழாக்களுக்கு யானைகளை அழைத்து வருவதற்கு எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாத நிலையில், உரிய அனுமதிகள் இன்றி வடக்குக்கு யானைகள் அழைத்து வரப்படுகின்றன.

அவ்வாறான நிலைகளில் யானைகள் மிரண்டாலோ, யானைகளுக்கு மதம் ஏற்பட்டாலோ அதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமைகள் ஏற்பட்டால் உயிரிழப்புக்கள் ஏற்படும் அபாயங்கள் உள்ளதனால், யானைகளை அழைத்து வருவதற்கு உரிய அனுமதிகள் ஊடாகக் கட்டுப்பாடுகள் விதிக்க வடக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.



# நல்லூர், காரைநகரில் நாம் ஆட்சி அமைத்தால் அந்தச் சபைகளைச் சிறப்பாக நடத்துவோம்!

## இப்படி மணிவண்ணன் தரப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 08

"நல்லூர் பிரதேச சபையிலும், காரைநகர் பிரதேச சபையிலும் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து தமிழ் மக்கள் கூட்டணி ஆட்சி அமைக்கக் கூடிய நிலைமை காணப்படுகின்றது. அவ்வாறு ஆட்சி அமைத்தால் அந்தப் பிரதேச சபைகளைச் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்வோம்." - என்று தமிழ் மக்கள் கூட்டணியின் முக்கியஸ்தரும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் மேயருமான சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் மான் சின்னத்தில் போட்டியிட்ட நமக்கு மக்கள் பெரும் ஆதரவைத் தந்துள்ளார்கள். இனிவரும் தேர்தல்களில் நாம் புத்தெழுச்சியுடன் போட்டியிடுவோம். இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தோம். அவற்றில் சில நிராகரிக்கப்பட்ட நிலையில் 7 சபைகளில் போட்டியிட்டோம். விதியோ சதியோ தெரியவில்லை எமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையால், நாம் சட்டப் போராட்டத்தில் ஈடுபட்டோம். அந்த முயற்சியும் தோல்வியடைந்தமையால் நாம் தேர்தல் பிரச்சாரப் பணிகளுக்காக வெறும் 11 நாட்களே செலவு செய்தோம்.

குறுகிய கால பிரச்சாரங்களை மேற்கொண்ட போதிலும் சிறப்பான அடைவுகளைப் பெற்றுள்ளோம்.

நல்லூர் பிரதேச சபையில் 6 ஆசனங்களையும், காரைநகர் பிரதேச சபையில் 2 ஆசனங்களையும் பெற்றுள்ளோம். அங்கு தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைக்கக் கூடிய நிலைமை காணப்படுகின்றது.

அவ்வாறு ஆட்சி அமைத்தால் அந்தப் பிரதேச சபைகளைச் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்வோம்." - என்றார்.

# கொழும்பில் 16 வயது மாணவி தற்கொலை செய்துகொண்ட விவகாரம்– நாடாளுமன்றுக்கு எடுத்துச்செல்லும் எம்.பி மனோகணேசன்!

கொழும்பு, மே .08

கொழும்பிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி பயின்றுவந்த 16 வயதுடைய மாணவியொருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட சகல நபர்களும் தண்டிக்கப்படவேண்டும் எனவும், இது தொடர்பில் ஏற்கனவே நாட்டின் பொறுப்புவாய்ந்த நபர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் கடந்த ஏப்ரல் 29ஆம் திகதி 16 வயதான மாணவி அவர் வசிக்கும் தொடர்மாடிக்குடியிருப்பின் 7 ஆவது மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்துகொண்டார்.

மாணவி தனது உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் தொடர்பான விபரங்கள் எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு வருகின்றன'

குறித்த மாணவி முதலில் தென் கொழும்பின் பிரபல மகளிர் பாடசாலையொன்றில் கல்வி பயின்றபோது கடந்த வருட இறுதியில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் சம்பவம், அதுகுறித்து கல்வி வலயம், பாடசாலை, பொலிஸ், நீதிமன்ற விசாரணை விபரங்களை தான் பெற்றுக்கொண்டுள்ளதாக மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 'இத்துயர சம்பவத்தால் பிள்ளையை இழந்து வாடும் பெற்றோருக்கு பிள்ளையை மீண்டும் பெற்றுக்கொடுக்கமுடியாது. அது மிகப்பெரும் துயரம். காலம் தான் அவர்களுக்கு ஆறுதலளிக்கவேண்டும்' எனவும் அவரது பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 18 வயதை அடையாத அம்மாணவியை மன உளைச்சலுக்கு உள்ளாக்கி, அவரது அகால மரணத்துக்குக் காரணமான சகல நபர்களும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் எனவும், இதுகுறித்து தான் ஏற்கனவே நாட்டின் பொறுப்புவாய்ந்த நபர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதாகவும் மனோகணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாரம் இதுபற்றி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பவுள்ளதாகவும், அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் அலட்சியம் காட்டும் அதிகாரிகள்- சட்டத்தரணிகள் சங்கம் குற்றச்சாட்டு!

கொழும்பு, மே .08

அண்மைக்காலமாக பல்கலைக்கழகங்களில் இடம்பெற்று வரும் பகிடிவதை சம்பவங்கள் உரிய கல்விக் கட்டமைப்புக்களின் அதிகாரிகளின் அலட்சியத்தினால் நடைபெற்றிருப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குற்றம்சுமத்தியுள்ளனர்.

பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் அவ்வதிகாரிகளும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பகிடிவதை காரணமாக சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த மாணவன் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் தொடர்பில் நாம் மிகுந்த வருத்தத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

எந்தவொரு கல்வியியல் அமைப்புகளிலும் எந்தவொரு மாணவருக்கு எதிராகவும் பகிடிவதை மற்றும் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இது நாட்டின் சட்டத்தை மாத்திரமன்றி, அடிப்படை மனிதாபிமானக் கோட்பாடுகளையும் மீறுகின்ற செயலாகும்.

அத்துடன் 1998ஆம் ஆண்டு 20ஆம் இலக்க கல்விக்கட்டமைப்புக்களில் பகிடிவதை மற்றும் ஏனைய வன்முறை தடுப்புச்சட்டத்தின் சரத்துக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரால் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படாமை குறித்து நாம் தீவிர கரிசனை கொண்டிருக்கிறோம்.

இவ்வாறான சட்டவிரோத பகிடிவதை செயற்பாடுகளை முடிவுக்குக்கொண்டுவருவதற்கு அவசியமான நடவடிக்கைகளை பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்விக்கட்டமைப்புக்களின் அதிகாரிகள் முன்னெடுக்கவேண்டும் என அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஏப்ரலில் குவிந்த சுற்றுலாப் பயணிகள்

கொழும்பு, மே .08

இலங்கைக்கு ஏப்ரல் மாதத்தில் சுமார் 174,608 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி, இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து ஏப்ரல் இறுதி வரை சுமார் 896,884 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா மேம்பாட்டு ஆணையம் வெளியிட்ட சமீபத்திய தரவு அறிக்கை தெரிவிக்கிறது.


கடந்த 2024 ஏப்ரலில் சுமார் 148,867 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர்.

அதனுடன் ஒப்பிடுகையில், இந்த ஏப்ரல் மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 17.3% அதிகரித்துள்ளது.

முந்தைய மாதங்களைப் போலவே, ஏப்ரல் மாதத்தில் அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் நாடாக இந்தியா தொடர்ந்து உள்ளது. அதன்படி சுமார் 38,744 பார்வையாளர்களைப் பதிவு செய்துள்ளது.

கூடுதலாக, ஐக்கிய இராச்சியம் (17,348), ரஷ்யா (13,525) மற்றும் ஜேர்மனி (11,654) ஆகிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிவனொளிபாத யாத்திரை வெசாக் போயா தினத்தில் நிறைவு





கொழும்பு, மே .08

2024-2025 ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாத யாத்திரை காலம் மே மாதம் வெசாக் போயா தினத்தில் (12) முடிவடையும் என சப்ரகமுவ இரத்தினபுரி மாவட்ட ப்ரஸாத சங்கத்தின் தலைவரும், பெல்மடு தர்மலா ஸ்ரீ ரஜமஹா விஹாராதீஸ்வர, ப்ரஸாத சங்கத்தின் தலைவருமான ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஸ்ரீ பாத ஸ்தானாதிபதி தெரிவித்தார்.

சுமங்கல ரதனபால தம்மரக்கிதாபிதன் மற்றும் பெங்கமுவே ஸ்ரீ தம்மதின்ன தேரர்.2024-2025 சிவனொளிபாதயாத்திரையின் முடிவு குறித்து வியாழக்கிழமை (08) அன்று ஊடகங்களுக்கு தேரர் பேட்டி அளித்தபோது இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இதன்படி, சமன் தேவ பிரயாதிமா (13) தினத்தன்று, ஸ்ரீ பாதஸ்தான உடமளுவையில் வைக்கப்பட்டுள்ள திருமஞ்சனம் இரத்தினபுரி பாலபத்தரை வீதியில் உள்ள ஸ்ரீ பாதஸ்தான உடமலுவவிலிருந்து ஹட்டன் நல்ல தண்ணி லக்சபான அவிசாவளை வீதி, நவந்தனாவ, பலகோவ வரை கொண்டு செல்லப்படும் என ஸ்ரீ பாதஸ்தான தேரர் மேலும் தெரிவித்தார்.

பெல்மடுல்ல கல்பொத்தவலயில் உள்ள பாதஸ்தான ரஜமஹா விகாரை. சடங்குகளின்படி, சிவனொளிபாத ஆவாரம் முடியும் வரை நினைவுச்சின்ன கலசமும் சமன் தேவ பிரயாதிமாவும் அங்கேயே வைக்கப்படும்.

சிவனொளிபாத காலத்தின் போது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஸ்ரீபாத மலைக்கு வருகை தர நல்லதண்ணி காவல்துறையினருக்கு தகவல் அளித்து அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும்,

பிரதேச செயலாளர்களிடம் விண்ணப்பங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்று, பின்னர் நல்லதண்ணி காவல்துறையினரிடம் அனுமதிச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் ஸ்ரீபாத மலைக்கு மரியாதை செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கௌதம ஸ்ரீபாத தேரர் தெரிவித்தார். (ஐ)

# தமிழக அமைச்சரவை இலாகா மாற்றம் ரகுபதியிடம் இருந்து சட்டத்துறை பறிப்பு





தமிழக அமைச்சரவையில் இலாகா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் ரகுபதியிடம் இருந்து சட்டத்துறை பறிக்கப்பட்டு உள்ளது.

தமிழக அமைச்சரவையில் இலாகா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ரகுபதி சட்டத்துறை அமைச்சராக இருந்து வந்தார். அவரிடம் இருந்து சட்டத்துறை பறிக்கப்பட்டு அமைச்சர் துரைமுருகனுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

அமைச்சர் துரைமுருகனிடமிருந்து கனிமவளத்துறை, அமைச்சர் ரகுபதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இனி, அமைச்சர் ரகுபதி, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் என்று அழைக்கப்படுவார். நீர்வளத்துறை தொடர்ந்து அமைச்சர் துரைமுருகன் வசமே இருக்கிறது.

முதல்வர் ஸ்டாலினின் பரிந்துரைப்படி, அமைச்சரவை இலாகாவை மாற்றி கவர்னர் மாளிகை அறிவித்துள்ளது. (ஐ)

## தேர்வு முடிவு எதுவானாலும் அதுவே முடிவல்ல முதல்வர் ஸ்டாலின் அட்வைஸ்



தேர்வு முடிவு எதுவானாலும் அதுவே முடிவல்ல என்பதை மாணவர்களும், பெற்றோர்களும் உணர வேண்டும் என முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

12ம் வகுப்பு தேர்வு முடிவுகள் தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கை:

தேர்வு முடிவு எதுவானாலும் அதுவே முடிவல்ல என்பதை மாணவர்களும், பெற்றோர்களும் உணர வேண்டும். தேர்ச்சி பெறாதவர்கள், எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்காதவர்களுக்கு இன்னும் பல வாய்ப்புகளைக் காலம் வழங்கத்தான் போகிறது.

பெற்றோர்களும் பிள்ளைகள் மீது எந்த அழுத்தத்தையும் ஏற்படுத்தாமல், அவர்களது அடுத்தகட்ட வளர்ச்சிக்கு ஒரு நல்ல நண்பனாகத் துணைநில்லுங்கள். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார். (ஐ)

## சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு தமிழக அரசு மீது இ.பி.எஸ்., பாய்ச்சல்



"எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை. நாட்டில் என்ன நடக்கிறது என்று தெரியாமல் இருக்கிற ஒரே முதல்வர் ஸ்டாலின் தான்" என அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., விமர்சனம் செய்து உள்ளார்.

சேலம் மாவட்டம் ஓமலூரில் நிருபர்கள் சந்திப்பில் இ.பி.எஸ்., கூறியதாவது: தி.மு.க., ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை. ஆனால், தமிழகம் முன் மாதிரி மாநிலமாக இருக்கிறது என்கிறார் முதல்வர். நாட்டில் என்ன நடக்கிறது என்று தெரியாமல் இருக்கிற ஒரே முதல்வர் ஸ்டாலின் தான்.

பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. அ.தி.மு.க., வலியுறுத்தியதால் தான் ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. அ.தி.மு.க., மக்களுக்காக உழைக்கின்ற கட்சி. தி.மு.க., அரசு பொறுப்பு ஏற்றதில் இருந்து தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சரியில்லை. தமிழகத்தில் பொது மக்களுக்கும் பாதுகாப்பில்லை, முக்கியமாக பெண்களுக்கும் பாதுகாப்பு இல்லை.

தமிழகத்திற்கான நிதியை விடுவிக்க மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் கோரிக்கை வைத்தோம். அ.தி.மு.க., கோரிக்கை அடிப்படையில் 100 நாள் வேலை திட்டம், மெட்ரோவிற்கு நிதி ஒதுக்கப்பட்டது.

அமைச்சர் ரகுபதி நான் தூங்கிக் கொண்டிருப்பதாக பேட்டி அளித்தார். நான் சிறப்பாக செயல்படுவதால் தான் பொறுத்துக் கொள்ள முடியாமல் ரகுபதி இது போன்று ஊடகத்தின் வாயிலாக வெளிப்படுத்தி உள்ளார். ரகுபதி தி.மு.க.,வின் கொத்தடிமையாக செயல்பட்டு வருகிறார். இவ்வாறு இ.பி.எஸ்., கூறினார்.

ஆவடி போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுக்க சென்ற பெண்ணை தனியாக இருக்க அழைத்த போலீஸ்காரர் குறித்த வீடியோவை போட்டுக் காட்டி, சட்டம் ஒழுங்கு குறித்து இ.பி.எஸ்., கேள்வி எழுப்பினார். (ஐ)

## இந்தியாவுக்குள் ஊடுருவ முயற்சி பாக்., நபர் பஞ்சாபில் சுட்டுக்கொலை



பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற பாகிஸ்தானியர் பஞ்சாபில் பாதுகாப்பு படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதல் காரணமாக, பாகிஸ்தான்- இந்தியா இடையே பதற்றங்கள் அதிகரித்து உள்ளது. பாகிஸ்தானுக்கு ஆபரேஷன் இந்தியா என்ற பெயரில் தாக்குதல் நடத்தி இந்தியா தக்க பாடம் புகட்டி உள்ளது.

இந்நிலையில், இந்திய ராணுவம் எல்லைப் பகுதியில் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளது. பஞ்சாபின் பெரோஸ்பூரில் உள்ள எல்லைப் பகுதி வழியாக இந்தியப் பகுதிக்குள் ஊடுருவ முயன்ற ஒரு பாகிஸ்தானியரை இந்திய ராணுவம் சுட்டு வீழ்த்தியது.

பாகிஸ்தானை சேர்ந்த அந்த நபர் இரவு நேரத்தில், சர்வதேச எல்லையைக் கடந்து ஊடுருவ முயற்சி செய்ததை பாதுகாப்பு படையினர் கண்டறிந்தனர்.

இதையடுத்து, அவர் மீது பாதுகாப்பு படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். அந்த நபர் சுட்டு வீழ்த்தப்பட்டார் என பாதுகாப்பு படை மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## திராவிடம் போலியானது: சீமான் ஆவேசம்




புதுக்கோட்டை வடகாடு கோவில் திருவிழாவில், ஜாதி மோதலால் பதற்றமான சூழல் எழுந்துள்ளது. இது மிகுந்த மன வேதனை அளிக்கிறது.

ஜாதியை ஒழித்தோம் சமூக நீதியை காத்தோம் என தற்பெருமை பேசும் திராவிட கட்சிகளின், 60 ஆண்டுகால ஆட்சியில் நடக்கும் இதுபோன்ற ஜாதி கொடுமைகள், திராவிடம் என்பது போலியானது பொய்யாக கட்டமைக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகிறது.

வடகாடு கலவரத்திற்கு ஜாதி மோதல் காரணமல்ல் மது போதையில் ஏற்பட்ட முன்விரோதமே காரணம் என, காவல்துறை புதிய விளக்கம் அளித்துள்ளது. அது வெட்கக்கேடானது.

ஜாதி கலவரம் தான், தி.மு.க., அரசின் அவமானமா, மது போதை கலவரம் வெகுமானமா. இத்தனை வன்முறை வெறியாட்டங்களுக்கு காரணமான மதுவை, அரசு ஏன் தடை செய்யவில்லை? இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)




# விதிகளை உடை நமக்கென்ன தடை?


கனலி

விதிகள் என்பதே ஆண்களின் கண்ணோட்டத்தில் அவர்களுக்குச் சாதகமாக ஒன்றைப் பெண்கள் பின்பற்றியே ஆகவேண்டும் என்று நேரடியாகவும், மறைமுகமாகவும் வலிந்து ஏற்படுத்தியவைகள் தாம். அவற்றை எந்த சந்தர்ப்பத்திலும் மீறி விடக்கூடாது என்றுதான் தாய்மை, மென்மை, தெய்வம், புனிதம், தியாகம் என்று பலவிதக் கற்பிதங்களை ஏற்படுத்தி பெண்ணை ஒரு தெய்வீக நிலைக்கு உயர்த்தி, ஆனால் உண்மையில் பலிபீடத்தில் அமர்த்தி, ஆராதிப்பதாய்க் காட்டிக் கொண்டு பெண்களின் உழைப்பை சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பெண்கள் இதைத்தான் செய்ய வேண்டும் என்று அவர்கள் வரைந்த மாயக்கோட்டைத் தாண்டாமல் இதுகாறும் கடமையாற்றியவர்கள் புனிதமாக்கப்பட்டார்கள். மீறியவர்களும், தாண்ட எண்ணியவர்களும் இழிசொற்களால் வசை பாடப்படுகிறார்கள். அதுவும் யாரால்? இதர புனிதப் பெண்டிரால்தான். அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. இதுநாள் வரையிலும் ஆண்களின் கண்ணோட்டத்தில் சிந்திக்கத்தானே கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். பிறகென்ன செய்வது?..

பெண்களுக்கு என்று நிறைய விதிகள் நமது சமூகத்தில் இறைந்து கிடக்கிறது. அவற்றை மீறாமல் வாழத்தான் பெண்கள் எப்போதுமே பழக்கப்படுகிறார்கள். இப்போதுள்ள பெண்கள் இவற்றை மீறவேண்டும் என்று சிந்திக்கத் தான் தொடங்கியிருக்கிறார்கள். அந்தச் சிந்தனையின் சூட்டைக் கூடத் தாளமுடியாமல் ஆண்களும், அவர்களின் சிந்தனையைத் தங்களது மூளையில் ஏற்றிக் கொண்டுள்ள பெண்களும் கதறத் துவங்கியுள்ளார்கள். பெண்கள் இன்னும் முழுமையாக மாறிவிடவில்லை. சமுதாயத்திற்கும், தனது குடும்பத்திற்கும் அஞ்சி தனது சுய மரியாதையையும், தன்னம்பிக்கையையும் தொலைத்து நிற்கும் பெண்களே இங்கு அதிகம்.

சத்தமாக பேசக்கூடாது. சத்தமாக சிரிக்கக் கூடாது. பொது இடங்களில் அமரக் கூடாது. வீட்டு வேலைகளை பெண்கள் மட்டுமே செய்ய வேண்டும். சகிப்புத் தன்மையுடன் இருக்க வேண்டும். இன்னும்..இன்னும்.. ப்ளா ப்ளா ப்ளா.



என்னுடைய தோழியின் வீட்டில் அவளுடைய தந்தை இருக்கும்போது யாரும் சிரிக்கக் கூடாது. ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளக் கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடுகள் உண்டு. ஒருமுறை அவள் வீட்டுக்கு வீட்டுப் பாடம் எழுதச் சென்று அந்த இறுக்கமான சூழலில் பொருந்த இயலாமல் விரைவாகக் கிளம்பி வெளியே வந்த பின்னர் தான் சுவாசமே இலகுவானது.


இன்னொரு தோழி மணமான புதிதில் கணவரின் பிறந்த ஊருக்கு விருந்துக்குச் சென்றார். கணவரின் தாய்மாமா வரும்போது எழுந்து நின்று மரியாதை செய்திருக்கிறார். அங்கே இரண்டு நாட்கள் தங்கியிருந்திருக்கிறார். ஒவ்வொரு முறை தாய்மாமாவை எதிர்கொள்ளும் போதும் எழுந்து நின்று பணிவைக் காட்டச் சொல்லியிருக்கிறார் மாமியார். அது மட்டுமின்றி அவர் நாற்காலியில் அமர்ந்திருக்கும் போது தோழியைக் கீழே அமரச் சொல்லியிருக்கிறார். தோழி ஆட்சேபித்து மறுத்ததற்கு இன்று வரை மாமியார் வீட்டில் அடங்காப்பிடாரி என்ற பட்டத்தைச் சுமக்கிறார். இதெல்லாம் என்ன வகையில் சேர்த்தி?..

வீட்டுவேலையைப் பெண்கள் மட்டுமே செய்ய வேண்டும் என்ற போக்கு இன்றும் நிறைய ஆண்களின் மனதில் படிந்திருக்கிறது. என் நெருங்கிய உறவினர் மகன் ஒருமுறை வீட்டுக் கூடத்தைப் பெருக்கச் சொன்னதற்கு, “அதெல்லாம் பொண்ணுங்க தானே செய்யணும்?” என்றான். கடுப்பான நான் அரைமணி நேரம் வகுப்பெடுத்தேன். அவன் மண்டையில் ஏறியிருக்குமா என்பதுதான் ஐயமாக இருக்கிறது. வீட்டின் அங்கத்தினர் என்ற முறையில் ஒவ்வொருவரும் வேலையைப் பகிர்ந்து கொள்ள இனியாவது பழக்க வேண்டும்.

அதேபோல் எனக்கு ஆற்றாமையான இன்னொரு விஷயம் உள்ளூர்த் தேநீர்க் கடையில் அமர்ந்து தேநீர் அருந்த முடியாதது தான். அதென்னவோ பெரிய கொலைக் குற்றம் போலப் பார்க்கிறார்கள். வெளியூர் செல்லும் போது சிலசமயங்களில் கிராமப்புற பகுதிகளில் கடைக்குள் அமர்ந்து தேநீர் அருந்துவோம். அப்போது அங்கு வரும் ஆண்கள் விசித்திரமான ஏலியனைப் பார்ப்பது போல நோக்குவார்கள். இயல்பாக இருக்க முடிவதில்லை. டீக்கடை என்றாலே ஆண்கள் ஏரியா என்பதை எப்போது உடைப்போமென்று தெரியவில்லை.

உட்காருவதில் கட்டுப்பாடு, துப்பட்டா போடச் சொல்லி பிடிவாதம், ஆண்கள் பேசும் பொழுது குறுக்கிட்டால் கழுவிலேற்றும் தண்டனை என்று பெண்களை இன்னும் அடக்கியே வைத்திருக்கத்தான் இந்த ஆணாதிக்க சமூகம் விரும்புகிறது. ஆனால் அடக்கி வைக்கப்படும் ஒன்று மேலெழும்பி வரும்போது அதிகப்படியான வேகத்தில் தான் வரும். அடக்கி வைத்தவர்களைத்தான் அது முதலில் தாக்கும் என்பதை ஆண்கள் சமுதாயம் மறந்து விடக்கூடாது.

(7ஆம் பக்கம் பார்க்க..)



# இந்தியா - பாகிஸ்தான் இடையே பதற்றம்

## சவுதி அரேபியா அமைச்சருடன் ஜெய்சங்கர் ஆலோசனை



இந்தியா, பாகிஸ்தான் இடையே பதற்றமான சூழலில் நிலவி வரும் நிலையில், சவுதி அரேபியா வெளியுறவுத்துறை இணை அமைச்சருடன் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தினார்.

கடந்த ஏப்.,22ம் தேதி பஹல்காமில் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 இந்தியர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்தை தொடர்ந்து, இந்தியாவும் ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் பதிலடி கொடுத்துள்ளது. இதனால், இரு நாடுகளிடையே பதற்றமான சூழல் நிலவி வருகிறது. அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட பல்வேறு நாடுகள், இந்தியா, பாகிஸ்தான் இடையிலான பதற்றத்தை தணிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், திடீர் பயணமாக இந்தியா வந்துள்ள சவுதி அரேபியாவின் வெளியுறவுத்துறை இணையமைச்சர் அடெல் அல்-அல்ஜ/பைர், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது, இந்தியா, பாகிஸ்தான் இடையிலான பதற்றத்தை தணிப்பது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.

இது குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்ட அமைச்சர் ஜெய்சங்கர், 'பயங்கரவாதத்தை இந்தியா எதிர்க்கும் விதம் குறித்து சவுதி அரேபியாவின் வெளியுறவுத்துறை இணையமைச்சர் அடெல் அல்-அல்ஜ/பைர் உடன் ஆலோசனை நடத்தியதாக குறிப்பிட்டார்.

அதேபோல, ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அரக்ச்சி நேற்றிரவு டில்லி வந்தார். இந்தியா, பாகிஸ்தான் தாக்குதல் சம்பவம் குறித்து அமைச்சர் ஜெய்சங்கருடன் அவர் ஆலோசனை நடத்தினார். (ஐ)

## பயங்கரவாத உள்கட்டமைப்பை அழித்தது நியாயமானது: பிரிட்டன் முன்னாள் பிரதமர் ரிஷி சுனக்



பயங்கரவாத உள்கட்டமைப்பை அழித்தது நியாயமானது என்று பிரிட்டனின் முன்னாள் பிரதமரும் இந்திய வம்சாவளியை சேர்ந்தவருமான ரிஷி சுனக் கூறியுள்ளார்.

ஏப்ரல் 22 ஆம் தேதி பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பயங்கரவாத உள்கட்டமைப்புகள் மீது ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் இந்திய ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில் பிரிட்டன் முன்னாள் பிரதமர் ரிஷி சுனக், இந்திய நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

வேறொரு நாட்டின் கட்டுப்பாட்டில் உள்ள நிலத்திலிருந்து தனக்கு எதிராக பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படுவதை எந்த நாடும் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. பயங்கரவாத உள்கட்டமைப்பை இந்தியா தாக்குவதில் நியாயம் உள்ளது. பயங்கரவாதிகளுக்கு இதை விட எந்தத் தண்டனையும் இருக்க முடியாது. இவ்வாறு ரிஷி சுனக் கூறியுள்ளார்.

பிரிட்டன் பார்லிமென்டில் அந்நாட்டு பிரதமர் ஸ்டார்மர், பேசும்போது, நாங்கள் இரு நாடுகளுடனும், மற்ற சர்வதேச கூட்டாளி நாடுகளுடன் பதற்றத்தைக் குறைத்தல் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு குறித்து அவசர ஆலோசனை, பேச்சுவார்த்தை நடத்துகிறோம் என்று கூறினார். இந்நிலையில் ரிஷி சுனக் தனது கருத்துக்களை தெரிவித்துள்ளார். (ஐ)

## இந்தியாவுக்கு அனைத்து உரிமையும் உண்டு

## ஆபரேஷன் சிந்தூருக்கு பிரிட்டன் எம்.பி., ஆதரவு




இந்தியா தன்னை பாதுகாத்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்க அனைத்து உரிமைகளும் உண்டு என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம் என்று இந்திய வம்சாவளி எம்.பி., ப்ரீத்தி படேல் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து ப்ரீத்தி படேல் பேசியதாவது பாகிஸ்தானில் இருந்து செயல்படும் குழுக்களால் ஏற்படும் எல்லை தாண்டிய பயங்கரவாத அச்சுறுத்தலை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட மும்பை, டில்லி ஆகிய இந்திய நகரங்களின் பட்டியலில் பஹல்காமும் சேர்ந்து விட்டது.

இந்தியா, பாகிஸ்தான் இடையே ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிக்க விரும்புகிறோம். அடுத்தடுத்த ராணுவ குவிப்பை தவிர்க்க நினைக்கிறோம். ஆனால், இந்தியா தன்னை பாதுகாத்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்க அனைத்து உரிமைகளும் உண்டு என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகள் இந்தியா மட்டுமின்றி மேற்கத்திய நாடுகளுக்கும் அச்சுறுத்தலாக இருக்கின்றனர்.

ஒசாமா பின்லேடன் பதுங்கியிருந்த நாடு பாகிஸ்தான். நீண்ட காலமாக இந்தியா மீது பயங்கரவாத வன்முறை நிகழ்த்தப்பட்டு வருகிறது. அதேவேளையில், இங்கிலாந்து, இந்தியாவுடன் நீண்ட கால பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தங்களை கொண்டுள்ளது. உலகளாவிய பயங்கரவாதத்தை எதிர்க்க நட்பு நாடுகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும், எனக் கூறினார். (ஐ)

## பாக்.,கில் வேலை செய்யாத சீனாவின் ஏவுகணை கவசம்



நம் அண்டை நாடான சீனா, பாகிஸ்தானுக்கு வான் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், ஏவுகணை எதிர்ப்பு அமைப்பை வழங்கி உள்ளது. அதாவது, பாக்., வான்வெளிக்குள் ஏவுகணைகள், ட்ரோன்கள் அத்துமீறி நுழைந்தால், அவற்றை கண்டுபிடித்து, இந்த அமைப்பு அழிக்கும் மேலும் எச்சரிக்கை செய்யும்.

எனினும், நேற்று அதிகாலை நம் ராணுவத்தின், 'ஆப்பரேஷன் சிந்துார்' நடவடிக்கையின் போது, இந்த ஏவுகணை எதிர்ப்பு அமைப்பு வேலை செய்யவில்லை நம் ராணுவத்தின் ட்ரோனகளை இடைமறித்து தாக்கவில்லை.

இந்த அமைப்பை தாண்டி சென்று, பாகிஸ்தானுக்குள் நுழைந்து நம் ஏவுகணைகள் தாக்குதல் நடத்தி உள்ளன. இந்த தாக்குதலுக்கு, ஐரோப்பிய நாடான பிரான்சின், 'ஸ்கால்ப் குரூஸ்' ஏவுகணைகளை நம் ராணுவத்தினர் பயன்படுத்தி உள்ளனர்.

குறைந்த உயரத்தில் பறக்கும் திறனுடைய இந்த ஏவுகணைகள், பாகிஸ்தானின் ஏவுகணை எதிர்ப்பு அமைப்பின் ரேடாரில் தென்படாமல் தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டன.

(ஐ)

## மின்னல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த குணரட்னம் குமரன் (வயது 39) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் ஏழாலை பகுதியில் உள்ள தோட்டமொன்றில் மிளகாய் பறித்துக்கொண்டிருந்த வேளை திடீரென மழை பெய்தமையால், மழைக்கு ஒதுங்கி நின்றபோதே மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதுவரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாகக் கடமையாற்றி வந்த எச்.ஜே.எம்.சி.ஏ. ஜயசுந்தரவின் பதவிக் காலம் கடந்த 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமையுடன் நிறைவு பெற்றது.

இந்நிலையிலேயே, பரீட்சை திணைக்களத்தில் சேவையாற்றி வந்த சுபாஷினி இந்திகா குமாரி லியனகே பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். அத்துடன், புதிய அளவையாளர் நாயகமும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்தவகையில், வை.ஜீ.ஞானதிலக்க புதிய அளவையாளர் நாயகமாக நியமனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஏழாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஏழாலை, மத்தியைச் சேர்ந்த பாலசிங்கம் ஜெகாஸ் (வயது - 42) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவந்துள்ளதாவது,

மேற்படி நபர் தனது வேலைத்தளத்தில் வேலை செய்துகொண்டிருந்தவேளை திடீரென அவரது நெஞ்சுப் பகுதியில் வாள் வெட்டி படுகாயம் ஏற்பட்டது.

இதனையடுத்து, அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இந்தநிலையில் பலத்த காயம் காரணமாக அதிக இரத்தம் வெளியேறிய நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டதுடன் உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## அம்ஷிகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விவேகாந்தர் சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து, ஹின்னி அப்புஹாமி மாவத்தையில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையத்துக்கு முன்னாலும் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன், கொட்டாஞ்சேனை கல்பொத்த வீதியில் அமைந்துள்ள மாணவியின் வீட்டுக்கு முன்னால் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு மாணவியின் பெற்றோருக்கு ஆறுதலைத் தெரிவித்ததுடன், மாணவியின் மரணத்துக்குக் காரணமானவர்கள் தண்டனையின் முன்நிறுத்தப்படுவார்கள் என்று தெரிவித்து தங்களது ஆதரவு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததுடன் உயிரிழந்த மாணவிக்காக ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

இதேவேளை, பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள மாணவி ஆரம்பத்தில் கல்வி பயின்ற பாடசாலைக்கு முன்னாலும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## உழவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த 38 வயதுடைய பத்மநாதன் தனீஸ்வரன் என்ற நபரே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

மேற்படி நபர் நேற்று புதன்கிழமை இரவு தனது உழவு இயந்திரத்தின் கீழே இறங்கி நின்றவாறு திறப்பை இயங்கச் செய்துள்ளார்.

இதன்போது கியர் இயக்கத்தில் இருந்த உழவு இயந்திரம் திடீரென இயங்க ஆரம்பித்த நிலையில் குடும்பஸ்தர் கீழே வீழ்ந்ததால் அவர் மீது உழவு இயந்திரத்தின் சக்கரம் ஏறியது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர்மரண விசாரணையை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காகச் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## விலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில், “யாழ். மாநகர சபை மேயர் பதவி என்பது மிக முக்கியமானது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட முக்கியமானது. நாடாளுமன்ற உறுப்பினரை விட சிறப்பாகச் செயற்படக் கூடியவராக இருக்க வேண்டும். யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளும் இராஜதந்திரிகள் யாழ். மேயரை நிச்சயம் சந்திப்பார்கள். அவ்வாறானவர்களுடன் இராஜதந்திர ரீதியாக உரையாட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கக் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள், தமிழ் மக்களின் அபிலாஷைகள், அவர்களின் பிரச்சினைகள் என்பவற்றை எடுத்துக் கூற வேண்டும். எனவே, மேயராக தமது கட்சி சார்பாக முன்னிலைப்படுத்தப்படுபவர் சிறப்பானவராக இருக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கட்சிகள் பொறுப்புடன் உணர்ந்து கொண்டு அதற்கு ஏற்றது போல் மேயரைத் தெரிவு செய்ய வேண்டும்.” - என்றார்.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாங்கள் ஒற்றுமையாக இல்லாத நிலையில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி. அரசுக்குக் கூடுதலாக மக்களின் ஆதரவு கிடைக்கப் பெற்றுள்ளமை அனைவரும் அறிந்த விடயம். எனினும், இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் ஜே.வி.பி. பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது.

தமிழர்களைத் தமிழர்கள் ஆழக்கூடிய வகையில் தமது ஆணையைத் தமிழ் மக்கள் வழங்கியுள்ளனர். மேலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமையாகப் பயணிக்க வேண்டும் என்கின்ற செய்தியையும் சொல்லி இருக்கின்றார்கள். எம்மைப் பொறுத்த வகையில் அடுத்தடுத்து வருகின்ற தேர்தலாக இருக்கலாம், போராட்டங்களாக இருக்கலாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கின்ற அடிப்படையில் செயற்படக்கூடிய ஒரு முயற்சியை நாம் முன்னெடுக்கின்றோம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை வைத்துப் பார்க்கின்றபோது வடக்கு, கிழக்கில் எந்தக் கட்சியும் தனித்து ஆட்சி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே நாங்கள் கூறியது போல் தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்துக்கொண்டு நாங்கள் ஆட்சி அமைப்போம். நாங்கள் தமிழரசுக் கட்சியுடனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அணியுடனும் பேசிக்கொண்டு இருக்கின்றோம்.

எதிர்வரும் காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக ஒரே அணியாகச் செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவோம். நாங்கள் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்பதற்காக மக்கள் வாக்குகளை வழங்கியுள்ளனர். மக்களின் ஆணையை உணர்ந்தவர்களாக நாங்கள் செயற்பட வேண்டும்.” - என்றார்.

# யாழில் காய்ச்சலால் இளைஞர் உயிரிழப்பு

பருத்தித்துறை, மே 08

யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்களாகக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த இளைஞர் உயிரிழந்த நிலையில் , உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த பரந்தாமன் லக்சன் (வயது 21) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞர் கொழும்பில் உயர் படிப்பை கற்றுவரும் நிலையில், யாழ்ப்பாணத்தில் உள்ள தனது வீட்டுக்கு திரும்பிய நிலையில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார்.

நான்கு நாட்களாகக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று புதன்கிழமை உடல்நிலை மிக மோசமான நிலையில் குடும்பத்தினர் அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

அவரின் உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோத னைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# வாகன விபத்தில் இருவர் மரணம்!

*கொழும்பு, மே 08*

*வாகன விபத்தில் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*இந்த விபத்து நேற்று புதன்கிழமை மாலை அம்பாந்தோட்டை மாவட்டம், வீரகெட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருகொடெல்ல சந்திக்கு அருகில் இடம்பெற்றுள்ளது. லொறி ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.*

*விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் வீரகெட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வீரகெட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

# விதிகளை உடை......................

இது எச்சரிக்கை இல்லை. (லைட்டா எச்சரிக்கை தான்..) இதை ஆண்களுக்கு முதலில் உணர்த்த வேண்டும். ஆண்கள் என்ன சொன்னாலும் அதைக் கேள்வி எதுவும் எழுப்பாமல் கண்மூடித்தனமாகப் பின்பற்றத்தான் இந்தச் சமுதாயம் பெண்களுக்குச் சொல்லித்தருகிறது. லேசாகப் புருவம் உயர்த்துபவர்களின் நடத்தை கேள்விக்குறியாக்கப் படுகிறது.

எந்த ஒன்றையும் இறுதியில் பெண்ணின் நடத்தையில் கொண்டு வந்து சேர்ப்பதில் ஆண்களை விட ஆணாதிக்கச் சிந்தனையில் இருக்கும் பெண்களே வேகமாக இருக்கிறார்கள். ஏற்றுக் கொள்ளச் சங்கடமாக இருந்தாலும் இதுதான் உண்மை.

இன்னும் அரசியல் துறையில் முப்பத்தி மூன்று சதவிகிதம் இட ஒதுக்கீடு கேட்கும் நிலையில் தான் இருக்கிறோம். சரிக்குச் சமமாகவோ அல்லது ஆண்களை விட அதிகமாக அரசியலில் ஈடுபடவோ வாய்ப்புகள் எதுவும் கிடையாது. அப்படியே அரசியலில் நுழைந்தாலும் நிழலாக தந்தையோ, சகோதரனோ, அல்லது கணவனோ பின்புலத்தில் இயங்கிக் கொண்டு தான் இருக்கிறார்கள். இந்நிலையை மாற்றி நிர்வாகத் திறன் பெண்களிடமும் அதிகம் இருக்கிறது என்று நிரூபிக்க வேண்டும். பெண் ஒன்றும் இரண்டாம் பாலினம் இல்லை. சமமான பாலினம் தான் என்பதை இன்னும் உரக்கக் கூவி இவர்களின் புத்தியில் திணிக்க வேண்டும். இரண்டாம் பட்சமாக தம்மை நினைப்பதையும், வெளிப்படுத்திக் கொள்வதையும் முதலில் பெண்கள் தகர்த்தெறிய முன்வர வேண்டும். வீட்டில் சாதாரண உணவு விஷயத்தில் கூட பெண்கள் விட்டுக் கொடுத்து தியாகி(?) ஆகிறேன் பேர்வழி என்று தன்னுடைய உடல்நலனைக் கெடுத்துக் கொள்ளாமல் தனக்குரிய உரிமைக்கு அவ்வப்போது குரல் கொடுக்க வேண்டும். அதேபோல் தனது பாலியல் தேவையை வெளிப்படுத்தும் பெண்கள் மோசமானவர்களாகவே கருதப்படுகிறார்கள். அப்படியான பெண்களை அருவெறுப்பாகப் பார்ப்பது ஆண்கள் மட்டுமல்ல சில பெண்களும் தான். இன்னும் நமது இந்தியச் சமூகத்தில் ஆண்தான் பாலியல் தேவைக்கு அழைக்க வேண்டும். விருப்பம் இருக்கிறதோ இல்லையோ பெண் ஒத்துழைக்க வேண்டும் என்றுதான் பயிற்றுவித்திருக்கிறார்கள். பெண்ணாகத் தனது பாலியல் தேவையை, விருப்பத்தைத் தெரிவிப்பது என்னவோ தவறான செயல் என்பது போலவே பதறிப் போகிறார்கள்.

பெண் என்றாலே போகப் பொருளாக கருதும் பிற்போக்குத்தனம் இன்னும் அதிகரித்துத் தான் உள்ளது. அவள் எப்போதும் தன்னை அலங்கரித்துக் கொண்டு, அழகாகக் காட்டிக் கொண்டு இருக்க வேண்டும். இல்லையென்றால் புருஷன் அடுத்தவளைத் தேடிப் போய்விடுவான். அவள் அழுக்கு நைட்டியில் சமையலறை வாசனையுடன் இருக்கக் கூடாது. அழகாக மங்களகரமாக முக்கியமாக ஒல்லியாக இருக்க வேண்டும். கணவன் மட்டும் கிழிந்த டிரவுசர் அல்லது சாயம் போன லுங்கியுடன் தொப்பையைத் தடவிக் கொண்டு இன்னொருத்தியுடன் மனைவியை ஒப்பிட்டுக் கொண்டிருப்பான். அப்படியாவது அவர்களைத் தக்க வைத்துக் கொள்ள நினைப்பதை விட வேறு வேலை இருந்தால் பார்க்கலாம். இந்த சமுதாயத்தின் கலாச்சாரம், கண்ணியம், புனிதம், மானம், மரியாதை, கௌரவம் எல்லாம் பெண்ணின் யோனியில் தான் அடங்கியிருக்கிறது.

அதன் புனிதம் ஒருபோதும் கெடக்கூடாது. விதவைகள் மறுமணமா?.. கூடாது.. பிடிக்காத திருமண பந்தத்திலிருந்து விடுதலையா?.. மூச்.. குடும்ப கௌரவம் போய் விடும். கற்பழிக்கப்பட்டாலும் பெண்ணுக்குத் தான் கற்பு(?) அழியும். ஆணுக்கெல்லாம் கற்பு என்பது இல்லை. குற்றவாளியைத் தூண்டியதாக அவள்மீது தான் பழி வரும். இந்த ஆணாதிக்கச் சமூகத்தின் ஆகப் பெரிய விதி இதுதான். காலங்காலமாய்ப் பெண்களுக்கு என்று ஆண்கள் வகுத்துள்ள விதிகளை இனியேனும் உடைப்போம். அதற்கான உளி பெண்களின் கையில்தான் இருக்கிறது. இப்போதிலிருந்து உடைக்கத் தொடங்குவோம். போக வேண்டிய தொலைவு இன்னும் அதிகமாக இருக்கிறது.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.05.2025 வெளியிடப்பெற்றது.